# ஏப்ரல் – 15 – புனித வாரத் திங்கள்

தூய பெனடிக்ட் வளன்லாபர்

ஆண்டவரே என் ஒளி: அவரே என் மீட்பு: யாருக்கு நான் அஞ்சவேண்டும்? திபா. 27:1

## முதல் வாசகம் : ஏசாயா 42 : 1 - 7

ஆண்டவர் கூறுவது இதுவே : இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் நான் தேர்ந்துகொண்டவர் அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிடமாட்டார் தம்குரலை உயர்த்தமாட்டார் தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார் உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார். உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் மனம் தளரமாட்டார் அவரது நீதிநெறிக்காகத் தீவு நாட்டினர் காத்திருப்பர். விண்ணுலகைப் படைத்து விரித்து, மண்ணுலகைப் பரப்பி உயிரினங்களைத் தோன்றச் செய்து, அதன் மக்களுக்கு உயிர்மூச்சுத் தந்து, அதில் நடமாடுவோர்க்கு ஆவியை அளித்தவருமான இறைவனாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன் உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன் மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு.

## நற்செய்தி : யோவான் 12 : 1 - 11

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப் பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார். மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து, "இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான். ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு. அப்போது இயேசு, "மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை" என்றார். இயேசு அங்கு இருப்பதை அறிந்த யூதர்கள் பெருந்திரளாய் வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டும் அல்ல, அவர் உயிர்த்தெழச் செய்திருந்த இலாசரைக் காண்பதற்காகவும் வந்தார்கள். ஆதலால் தலைமைக் குருக்கள் இலாசரையும் கொன்றுவிடத் திட்டமிட்டார்கள். ஏனெனில் இலாசரின் காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு ஒளியாக வந்தவர் என்றும் மக்களின் வாழ்வு வெளிச்சமாக இருக்க வேண்டுமென்று தனது உயிரைக் கொடுத்து எம்மைப் பாவங்களிலிருந்து மீட்டார். எனவே தான் அதை நினைவுகூருமுகமாக இம்மனமாற்றத்தின் காலத்தில் செய்த பாவங்களை சிந்தித்து மனமாற அழைககப்படுகின்றோம். இத்தபசு காலத்தில் செப, தப. ஒறுத்தல் என்று பல ஒறுத்தல் முயற்சிகள் செய்கின்றோம் ஆனால் எங்களை மாற்றிக் கொள்வதில்லை. இறைமகன் "பலியை அல்ல இரக்கத்தையே நான் விரும்புகின்றேன்" என்று கூறுகின்றார். இவ்விரக்கமானது எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்க வேண்டுமாயின் ஒருவரோடொருவர் ஒற்றுமையோடு ஒன்றித்து வாழ வேண்டும். "நீ உன் காணிக்கைகளை செலுத்து முன்பு உன் சகோதரனுடனோ, அல்லது சகோதரியிடமோ மனத்தாங்கல் இருந்தால் முதலில் ஒப்புரவாகிவிட்டு பின்பு உன் காணிக்கைகளை செலுத்து" என்று இயேசு கூறுவதை வேதாகமத்தில் பார்க்கின்றோம். ஆனால் அவ்வாறு வாழ்கின்றோமா? எப்பொழுதும் பிரச்சனை. பிளவு என்றே எமது வாழ்க்கையை ஏமாற்றியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நற்செய்தி வாசகதில் மார்தா, மரியாள் வீட்டிற்கு இயேசு சென்றபொது அங்கு லாசரும் இருந்தார் மார்த்தாவோ அவர்களுக்கு உணவு பரிமாறினாள் ஆனால் மரியாவோ இயேசுவின் தலையில் நறுமணத்தைலம் பூசி தனது கூந்தலால் துடைத்தாள். இத்தபசு காலத்தலில் நாங்கள் நோன்பு இருக்கின்றோம், ஒறுத்தல் முயற்சி செய்கின்றோம் என்று வெளிவேடமாக செய்யாமல். வேதத்தில் கூறப்பட்டது போல தலைக்கு எண்ணெய் பூசி முகவாட்டத்தோடு அல்லாமல், முகப்பொலிவோடு இறையேசுவை ஏற்றுக்கொண்டு ஒளிர்விக்கும் இயேசு இன்றும் என்றும் எங்கள் கூடவே இருக்கிறார் என்று உறுதியுடன் வாழ்வோம்.